பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 2 ஜு: ஆகிர் 28 இதழ்: 125
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-6-77

லாலா சோப்
2-வது தயாரிப்பு
சன்சயின் சோப்
பிரகாசமாய் சலவை செய்கிறது. சன்சயின் சோப் தேவையானவர்கள் முன்கூட்டியே ஓடர்செய்தால் ஓடர்கள் முக்கியமாகக் கவனிக்கப்படும்.
லலலா சோப்
தொழிற்சாலை,
அச்சுவேலி.

## மாவட்டஎல்லை நிர்ணயக்குழு நாளை யாழ். விஜயம்
### சாட்சியங்களை பதிவுசெய்ய அழைப்பு

யாழ்ப்பாணம், வியா. மாவட்டங்கள், உள்ளூராட்சி அதிகாரப்பகுதிகள் பிரிவுகள் சம்பந்தமான எல்லை நிர்ணயக்குழு யாழ்ப்பாணத்தில் நாளை 17-ம் திகதி சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது.

யாழ்.மாநகரசபைமாநாட்டு மண்டபத்தில் நாளைக் காலை 9 மணி முதல் இந்த ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்யும்.

உள்ளூராட்சி மன்றங்கள், பொதுஸ்தாபனங்கள், பொது மக்கள் தங்கள் கருத்துக்களை இந்த ஆணைக்குழு பின் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழப்பாணத்தில்கூடவுள்ள இந்த இந்த ஆணைக்குழுவில் 18 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்.

நாளைக்காலை 10 மணிக்கு வவனியாவிலும், 12 மணிக்கு மன்னாரிலும் வெவ்வேறு ஆணைக்குழுக்கள் அவ்வப்பகுதிகளில் இதுசம்மந்தமான சாட்சியங்களைப் பதிவு செய்யும்.

# தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சி!
# கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர்?



## அறுதிப் பெரும்பான்மை அ.இ.அ.தி.மு. கழகத்துக்கே



### புலவர் கோவிந்தன் வெற்றி

கருணாநிதி ஆட்சியில் சபாநாயகராக இருந்த புலவர் கோவிந்தன் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு சுமார் 12 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

### பாண்டிச்சேரியில் ஆட்சி யாருக்கு?
### வடக்கில் ஜனதா அமோக வெற்றி

சென்னை, ஜூன் 15

தமிழ்நாட்டில் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமே ஆட்சி பீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது இதே சமயம் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராவாரென்பதும் நிச்சயமாகிவிட்டதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது,

கலைஞர் கருணாநிதி சென்னையில் அண்ணாநகர் தொகுதியிலிருந்து சுமார் 22 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டினார்.

எம். ஜி. ஆர். கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தது. காங்கிரஸ் கட்சியையும் ஜனதாக்கட்சியையும் மற்றையோரையும் சேர்த்து கலைஞர் கருணாநிதியே பலம்வாய்ந்த எதிர்க்கட்சியின் தலைவராயிருப்பாரென்று தமிழ்நாடு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

எதிர்க்கட்சிக் கூட்டணியில் தி. மு. கழகத்துடன் காங்கிரசும், ஜனதாக்கட்சியும் இணைந்து செயல்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பாண்டிச்சேரியில்

பாண்டிச்சேரியில் எந்தக்கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லையானாலும் 14 ஸ்தானங்களைப் பெற்றுள்ள எம். ஜி. ஆரின் அ. இ. அ. தி. மு.கவே ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்பைப்பெற்றுள்ளது.

எப்படியானாலும் வடநாட்டில் வீசிய ஜனதாஅலை தொடர்ந்து இம்முறையும் வீசியது போன்று தமிழ்நாட்டில் எம். ஜி. ஆரின் கவர்ச்சிஅலை லோக்சபாத் தேர்தலில் போன்று கடுமையாக வீசவில்லையென்றும் கருணாநிதியின் அலை மீண்டும் வீசத் தொடங்கியிருக்கிறதென்றும் அரசியல் அவதானிகள் பேசிக்கொள்கின்றார்கள்.

### ப. உ. சண்முகம் வெற்றி

தி. மு. கழக அரசாங்கத்தில் உணவு அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் திருவண்ணாமலையில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட அ. இ. அ. தி. மு. க. வேட்பாளர் கே. ஆர். வெங்கடேசனை ஏழாயிரத்துக்குமதிகமான வாக்குகளால் வெற்றியீட்டினார். இதேசமயம் கருணாநிதி அமைச்சரவையில் மந்திரியாக இருந்த கண்ணப்பன் தோல்வியடைந்தார்.

### சி.பா. ஆதித்தனார் தோல்வி

கருணாநிதி ஆட்சியில் சபாநாயகராகவும் பின்னர் அமைச்சராகவும் இருந்து அண்மையில் திரு. நெடுஞ்செழியனுடன் தி. மு. கவிலிருந்து வெளியேறி மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தவர்களில் ஒருவரான திரு. சி.பா. ஆதித்தனார் சாந்தாக்குளம் தொகுதியில் ஜனதா கட்சி வேட்பாளரிடம் தோல்வியுற்றார் இவர் சுயேட்சையாகப் போட்டியிட்டார்.

### பாண்டிச்சேரி கட்சி நிலை

| | |
|---|---|
| அ.இ.அ.தி.மு.க. | — 14 |
| ஜனதா | — 07 |
| தி. மு. க. | — 03 |
| காங்கிரஸ் | — 02 |
| இந்திய கம். | — 01 |
| சுயேச்சை | — 03 |
| மொத்தம் | — 30 |

### பண்ருட்டியில் ராமச்சந்திரன் வெற்றி

கருணாநிதி மந்திரி சபையில் ஒரு அமைச்சராக இருந்து பின்னர் வெளியேறி எம். ஜி. ஆர். கட்சியில் சேர்ந்து பண்ருட்டியில் அ. இ. அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்ட ராமச்சந்திரன் வெற்றியீட்டினார்.

### சாதிக் பாட்சா வெற்றி

ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்ட கருணாநிதியின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த தி. மு. க. பொருளாளர் சாதிக் பாட்ஷா வெற்றிபெற்றார். இவருக்கு 29,599 வாக்குகள் கிடைத்தன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ. இ. அ. தி. மு. க. வேட்பாளர் திரு. ஐ அன்புமணிக்கு 15,230 வாக்குகள் கிடைத்தன.

### முத்துச்சாமி தோல்வி

திரு. சி. என். அண்ணாதுரையின் அமைச்சரவையில் அமைச்சராகஇருந்த திரு. முத்துசாமி வீரபாண்டி தொகுதியில் அ. இ. அ. தி. மு. க. வேட்பாளர் திரு. பி. வெங்கட் கவுண்டரிடம் சுமார் 13 ஆயிரம் வாக்குகளால் தோல்வி அடைந்தார்.

### ஆனந்தநாயகி தோல்வி

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி ரி. என். ஆனந்தநாயகி ராதாகிருஷ்ணநகர் தொகுதியில் ஜனதாகட்சி அபேட்சகரிடம் தோல்வி அடைந்தார்.

### சென்னைநகரில் தி. மு. க.

சென்னைநகரில் உள்ள 14 தொகுதிகளில் 13 தொகுதிகளை தி. மு. க. கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(6-ம் பக்கம் பார்க்க)

### 'ஈழநாடு' தேர்தல் 77 போட்டி

மேற்படி போட்டிக்கான பிரவேசப்பத்திரம் உள்ளே இருக்கின்றது.

### தமிழ்நாடு கட்சி நிலை

மொத்த தொகுதிகள் — 234
வெளியான முடிவுகள்: 233

| | |
|---|---|
| அ.இ.அ.தி.மு.க. | — 129 |
| தி. மு. க. | — 48 |
| காங்கிரஸ் | — 27 |
| இந். கம்யூனிஸ்ட் | — 05 |
| ஜனதா | — 10 |
| மார்க். கம்யூ. | — 12 |
| பார்வார்ட் புளக் | — 01 |
| சுயேச்சை | — 01 |

### மணிவாக்கு

உழைக்காமல் உண்டுகொண்டிருப்பவன் பிறரிடமிருந்து களவாடப்பட்ட உணவையே உண்கின்ருன்.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

## கப்பல் தாமதக் கட்டணம்

இவ்வருடம் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கப்பல் தாமதக்கட்டணமாக நான்குலட்சத்து ஐம்பதினுயிரம் அமெரிக்க டாலர்களை அரசாங்கம் செலுத்தியிருக்கிறது.

பன்னிரண்டு கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே இருநூற்றிஇருபத்து மூன்று நாட்கள் நின்றதாலேயே இந்தத் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டி நேர்ந்திருக்கிறது.

உணவுப் பொருள்களையும் உரவகைகளையும் ஏற்றி வந்த கப்பல்களே துறைமுகத்துக்குவெளியே நீண்ட நாட்கள் தாமதித்து நிற்க நேர்ந்திருக்கின்றன.

அரிசி, மா, சீனி முதலிய உணவுப்பொருள்களைக் கப்பலிலிருந்து இறக்கிக் களஞ்சியங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதிலுள்ள வாகனப் பற்றுக்குறையே உணவுக் கப்பல்களின் தாமதத்துக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. உரவகைகள் இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதத்துக்கு துறைமுகத்தில் ஏற்பட்ட தொழிற்சங்கத் தகராறு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே கப்பல்கள் 'கியூ'வில் நிற்பது அதிசயமல்ல.

அங்கு கப்பல்கள் நீண்ட நாட்கள் நிற்காமல் உடனுக்குடன் இறக்குமதி ஏற்றுமதிவேலைகளை முடித்துக்கொண்டு திரும்பிச்சென்ருல்தான் ஆச்சரியம்.

துறைமுகத்தில் தொழிற்சங்கத்தகராறு ஏற்படுவதும் வேலைநிறுத்தங்கள் நடைபெறுவதும் இதனுல் கப்பல்களுக்குத் தாமதக்கட்டணமாகப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுப்பதும் ஆண்டுதோறும் நிகழ்ந்து வரும் சாதாரண சம்பவம்.

கொழும்புத்துறைமுகத்தில் தொழிற்சங்கத் தகரார்று மற்றும் காரணங்களினுல் கப்பல்களிலிருந்துஉணவுப்பொருள்களை இறக்குமதி செய்யமுடியாமல் போகும் சிலசமயங்களில் இக்கப்பல்கள் சிலவற்றைதிருக்கோணமலை, காலி, காங்கேசன்துறைத் துறைமுகங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவதுமுண்டு.

இந்தச் சந்தர்ப்பங்களில் இத்துறைமுகங்களில் இறக்குமதி வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று சாதனையை ஏற்படுத்திய நிகழ்ச்சிகளுமிருக்கின்றன.

காலி, காங்கேசன்துறைத் துறைமுகங்களைப்பொறுத்தவரையில் இவைகளைத் துறைமுகங்களென்று சொல்ல மூடியாது.

காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு ஆண்டு முழுவதிலும் கப்பல்கள் வரக்கூடிய நிலை இல்லை. ஆனுலும் நவீன முறையில் இங்கு துறைமுகம் அமைத்தால் பல கப்பல்களை இங்கே திருப்பி ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் துரிதமாக நடைபெறச் செய்யலாம்.

இதன் மூலம் கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்களுக்குத் தாமதக் கட்டணமாக ஆண்டுதோறும் செலுத்தும் பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்தலாம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலத்தில் கப்பல் தாமதக் கட்டணமாகச் செலுத்திய பணத்தில் காங்கேசன்துறைத் துறைமுகத்தை நல்லமுறையில் விருத்திசெய்திருக்கலாம்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை விருத்தி செய்யப்போவதாக ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்கள் வாக்குறுதியளித்தன. வடபகுதிக்கு வரும் அமைச்சர்களும்கூட காங்கேசன்துறைத் துறைமுகத்தை விருத்திசெய்வதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்துச் செல்வது வழக்கம்.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அமைச்சர்கள் பலருக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போதும் காங்கேசன்துறைத் துறைமுகத்தை விருத்திசெய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

இந்தியாவில் சேது சமுத்திரதிட்டம் இன்னும் சில வருடங்களில் நிறைவேறிவிடும்.

இத்திட்டம் நிறைவேறினுல் கொழும்புத் துறைமுகத்தில் வந்து மாதக்கணக்கில் கப்பல்கள் தாமதித்துக் கிடப்பதைக் கப்பல் கம்பனிகள் விரும்பமாட்டா. சுலபமாக சேது சமுத்திரத்தினூடாக இந்தியத் துறைமுகங்களுக்குக் கப்பல்களை அனுப்புவது கம்பனிகளுக்கு இலாபம் தரும்.

சேது சமுத்திரத் திட்டத்தை இலங்கையும் பயன்படுத்திக்கொள்வதற்கு வழியுண்டு. அது காங்கேசன்துறைத் துறைமுகத்தை நவீனவசதிகள் கொண்ட ஒரு துறைமுகமாக அபிவிருத்தி செய்வதே ஆகும்.

தேர்தலுக்குப்பின் ஆட்சிபீடத்துக்குவரும் அரசாங்கம் இவைபற்றிச் சிந்திக்கவேண்டும்.

## இரு பயிற்சி விமானிகள் விபத்தில் மரணம்

### கிரியல்லயில் சம்பவம்

கொழும்பு, புதன்

பயிற்சி விமானங்களில் சென்ற இரு விமானிகள் விபத்தில் உயிரிழந்தனர்.

இத் தகவலை இரத்தினபுரி அரசாங்க அதிபர் திரு. சமரசிங்கா வெளியிட்டுள்ளார்.

இரத்தினபுரி பகுதியில் உள்ள கிரியல்ல என்ற இடத்தில் நடந்த இவ் விபத்தில் காரியவாசம் செனிவரத்ன ஆகிய இரு பயிற்சி விமானிகளுமே மாண்டவராவர்.

விமானப்போக்குவரத்து திணைக்களம் இதுபற்றிய புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளது. [உ]

### "எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு

# என் தொகுதி அபிவிருத்திக்கு ரூபா 35 லட்சம் பெற்றுக்கொடுத்தேன்"

— வி. என்.

கொடிகாமம், புதன்

1947-ம் ஆண்டுமுதல் 56-ம் ஆண்டுவரை 9 வருடகாலத்தில் 23 லட்சம் ரூபாவையே சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்திக்கு செலவிடப்பட்டது. ஆனுல் நான் எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்து கொண்டு கடந்த 3 வருடகாலத்தில் சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்திக்கு 35 லட்சம் ரூபா செலவிட்டிருக்கிறேன்."

மட்டுவில்வடக்கு கண்ணகை சனசமூக நிலைய முன்றலில் நடந்த கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. எஸ். இராசசேகரம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

மக்களின் அறிவை வளர்த்து அவர்களின் ஆதரவுடன்ஆட்சி மன்றம் செல்வதும் அவர்களுக்கு வருங்காலப் பாதுகாப்பை முன்னிட்டு வெற்றிகரமான திட்டம்தீட்டி செயல்படுவதுமே கூட்டணியின் நோக்கம்.

உலகநாடுகள் எங்களை எதிர்பார்க்கும் இவ்வேளையில் நாம் நேரத்தை வீணுக்காமல் தமிழ் ஈழம் அமைப்பதையே கண்ணும் கருத்துமாகக்கொண்டு செயல்படவேண்டியது எங்கள் கடமை.

எதிர்வரும் பொதுத்தேர்தலை ஒருசர்வசன வாக்கெடுப்பாகக் கருதுகின்ருேம்.

காங்கேசன்துறையில்தந்தை செல்வாவுடன் திரு. வி. பொன்னம்பலம் போட்டி போட்டு 9000 வாக்குக்கள் பெற்றபோது உலகநாடுகள் அரசாங்கத்துக்கு ஆதரவாக 9000 தமிழ்மக்கள் தமிழ் ஈழத்தை ஏகோபித்தமுறையில் விரும்பவில்லை என்று கருதினர்.

அதனுல் எதிர்வரும் தேர்தலில் நாம் ஒற்றுமையாக நின்று ஒரு கட்சிக்கு வாக்களிப்பதால் அரசாங்கம் மட்டுமல்ல உலக மக்களும் தமிழர்கள் தனிநாடு அமைக்கக்கூடிய பக்குவ நிலையில் உள்ளனர்என்பதைஉணர்வார்கள்.

வண்ணை ஆனந்தன் திரு. ஆ. நடராசா திரு. மு. பால ரத்தினம் மற்றும் பலர் பேசினுர்கள்.

# "தக்கமுறையில் வாக்களிக்கவேண்டும்"

யாழ்ப்பாணம், வியா

'தன்மானமுள்ள தமிழன் தக்கமுறையில் தமது வாக்குகளை பிரயோகிக்கவேண்டும். உலகநாடுகள் இப்படியான பொதுத்தேர்தல்களை சர்வஜன வாக்கெடுப்பாகவே கருதுகின்றன''

திருநெல்வேலி கிழக்கில் நடந்த தமிழர்விடுதலைக்கூட்டணி பிரசாரக்கூட்டத்தில் பேசிய திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. ஆர். விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது: தேர்தலின் முன் எம்முடன் ஒற்றுமையாக இருந்தவர்கள் தேர்தலைக் கண்டதும் பிரிவது ஏன் என்று தெரியவில்லை. எமது ஒற்றுமையைக் கண்டுதான் பிரதமர் ஸ்ரீமாவோ எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். எனவே இது தனிப்பட்ட பிரச்னை அல்ல ஒரு இனத்தின் பிரச்னை. ஆதலால் ஒற்றுமையுடன் இருத்தல்வேண்டும்.

திரு. குணராசா பேசுகையில் தற்போது ஒரே கட்சியாக ஒற்றுமையாக நிற்கின்ருேம் என்ருர். [கு]

## தமிழினம் தலை நிமிர்ந்து வாழத்தக்க திட்டம் தம்மிடமிருக்கிறதாம்

### யோகேந்திரா கூறுகிருர்

ஊர்காவற்றுறை, புதன்

''தமிழ்மக்கள் இயக்கத்தின் கொள்கைகளை தமிழினம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றது. இந்த நாட்டில் தமிழினத்தின் இழந்த உரிமைகளை மீட்டெடுத்து தமிழினம் தலைநிமிர்ந்து வாழத் தக்க கொள்கைத்திட்டம், தமிழ்மக்கள் இயக்கத்திடமே இருக்கின்றது. அரசியலில் தமிழ்மக்கள் மத்தியில் புதிய பேரலையாகத் தமிழ்மக்கள் இயக்கம் பெரும் செல்வாக்கைப்பெற்று வருகின்றது. அதன்பயனுகப் பொதுத்தேர்தலில் எங்களுடைய வெற்றி நிச்சயமானதென்று சொல்லும்வகையில் இளைஞர்களும், பெரியோர்களும் அளித்து வருகின்ற ஆதரவுகண்டு நான் பிரமிக்கின்றேன்'' என்று தமிழ்மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஊர்காவற்றுறை பட்டினசபைக்கு அருகாமையில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்கு ஓய்வுபெற்ற பொலிஸ் அதிபர் திரு. செபமாலை தலைமை தாங்கினுர்.

திரு.யோகேந்திரா மேலும் பேசியதாவது, ''நான் உலகின் பல நாடுகளில் பணியாற்றியிருக்கிறேன். பல அரசியல் பெருந்தலைவர்களையும் சந்தித்திருக்கின்றேன். அவர்களும் அவர்களது கட்சிகளும் மிகவும் நேர்மையான முறையில் மக்களை ஏமாற்ருது பணியாற்றி, போராடி வெற்றியீட்டியதையெல்லாம் கண்ணுரக் கண்டிருக்கின்றேன்.

தமிழ் நிலத்தைப் பாதுகாக்க தரப்படுத்தலை ஒழிக்க தமிழ்மக்களது பொருளாதாரப் பலத்தைப் பெருக்க தமிழினத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட நான் அயராது போராடுவேன். தேர்தலுக்கு வந்த இயக்கமல்ல எனது இயக்கம். தேர்தலிலும் அதன்பின்னும், தமிழினத்தின் உரிமைகளுக்காக தமிழ்மக்கள் இயக்கம் போராடும்

கருத்தரங்கிற்கு தலைமை வகித்த திரு. எஸ். செபமாலை பேசுகையில் ''தமிழ் மக்கள் இயக்கத்தின் கொள்கைகள் உண்மையில் வரவேற்கத்தக்கவை. அவை நடைமுறைப்படுத்தப்பட தமிழ் மக்கள் அமோக ஆதரவு அளிக்கவேண்டும்'' என்ருர்.

தமிழ்மக்கள் இயக்கச்செயலாளர் திரு. நாவேந்தன் உட்படப் பலரும் பேசினர்.

### ஜி.ஜி. மணிமண்டபம்

## அரசாங்க அதிபரை சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு மணிமண்டபம் நிறுவுதற்கான காணியை ஒதுக்கீடு செய்வது பற்றி தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் கமிட்டி அரசாங்க அதிபரை சந்திக்கவிருக்கிறது.

கோண்டாவிலுள்ள ஜி.ஜி. தலைமைக்காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த ஜி. ஜி. காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இம்மாதம் 20 ம் தேதி காலை அரசாங்கஅதிபர் திரு. விஜயாபாலவை சந்தித்து ஜி. ஜி. யின் மணிமண்டபம் அமைப்பதற்கான காணி ஒதுக்கீடு பற்றி பேசுவதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு வெண்கலச்சிலை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க)

### உதவி அரசாங்க அதிபர் பணி மனை

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை பலாலி வீதி திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில்,இம் மாதம்17-ம் தேதி காலை அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ எ. எல். விஜயபாலாவினுல் திறந்து வைக்கப்படவிருக்கிறது. (க)

### மறுப்பு

'ஈழநாடு' 3-6-77 இதழில் 'செல்வாவின் அரசியல் வாரிசு நவம்' என்ற தலைப்பின்கீழே வெளிவந்த செய்தியில் திரு. கந்தையா தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டம் ஊர்காவற்றுறைத்தொகுதி தமிழ்இளைஞர் பேரவையின் ஆதரவில் கூடப்பட்டிருக்கிறது. இது தவருனது' என்று ஊர்காவற்றுறைத்தொகுதி தமிழ் இளைஞர்பேரவைத்தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

### 'நான் பேசவில்லை'

புங்குடுதீவில் நடைபெற்ற தமிழ் மக்கள் இயக்க தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தாம் கலந்துகொண்டு பேசவில்லை என்றும் 'ஈழநாடு' இதழில் தாம் கலந்துகொண்டு பேசியதாக வெளிவந்த செய்தி தவறு என்றும் த. இளங்கோவன் என்பவர் தெரிவித்துள்ளார்.



## நெருக்கடி நிலை அமுல் எதிரொலி

# இந்திராகாந்திக்கு எதிராக கிரிமினல் வழக்கு தாக்கலாகும்?



## லண்டனில் பிரதமர் தேசாய் சூசகத் தகவல்

லண்டன், ஜூன் 15

காங்கிரஸ் ஆட்சியின்போது பாரதத்தில் அமுல்செய்யப்பட்ட நெருக்கடிநிலை தொடர்பாக மாஜி பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு எதிராக கிரிமினல் வழக்கு தாக்கல் செய்வதற்கு புதிய பாரத அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

இத் தகவலை பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் லண்டனில் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றின்போது சூசமாகத் தெரிவித்தார்.

நிருபரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த பிரதமர் திரு. தேசாய், நெருக்கடி நிலை தொடர்பாக மாஜி பிரதமர் திருமதி காந்திக்கு எதிராக கிரிமினல் வழக்குத் தாக்கலாகாது என கூற முடியாது'' என்று பதிலளித்தார்.

லண்டன் காமன்வெல்த் மாநாட்டில் உரையாற்றிய திரு. தேசாய் வளர்முகநாடுகளுக்கு காமன்வெல்த் நாடுகள் காலங்கடத்தாது உதவவேண்டும் என்ருர். (உ)

### சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம்:

## 2 லட்சத்து 5000 பேர் தாயகம் சென்றனர்

கொழும்பு, புதன்

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இதுவரை 2 லட்சத்து 5000 இந்திய வம்சாவழியினர் தாயகம் அனுப்பப்பட்டுள்ளனர்.

1 லட்சத்து 15,000 பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை குடிவரவு—குடியகல்வு திணைக்களம் வெளியிட்டுள்ளது.

## நாடும் நயமும்




வேலர்: எங்களைப் பேய்கள் என்று நினைத்துக்கொண்டு இந்த வேட்பாளர்கள் மனைவிமாரை எங்களிடம் அனுப்புகினம் போலை.

மயிலர்: ஏன் அப்படிச் சொல்கிருய்?

வேலர்: பெண்ணென்ருல் பேயும் இரங்கும் அல்லவா?

— சுந்தர்

## ஐ. நாடுகள் மாநாடு பெல்கிரேட்டில் ஆரம்பம்

லண்டன், ஜூன் 15

ஐரோப்பிய நாடுகளின் மாநாடு இன்று பெல்கிரேடில் ஆரம்பமாகியது.

33 ஐரோப்பிய நாடுகளுடன் கனடா, அமெரிக்கா ஆகியவைபும் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன.

ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களை இந்நாடுகள் தலையிடபவிட்டால் இம்மாநாடு வெற்றி பெறும் என்று சோவியத் யூனியன் கருத்து வெளியிட்டுள்ளது. (உ)

## பொருள் இங்கே உரியவர் எங்கே?

யாழ்ப்பாணம், வியா

திருடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று உரிமையாளர் பெறும் உரிமை கோராத நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் உள்ளது.

பொலிசார் நபர் ஒருவரைக் கைது செய்ததன் மூலம்நான்கு கைக்கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் மூன்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

மேற்படி உரிமைகோரப்படாத சுமார் 600 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தை உரியவர் அத்தாட்சிகாட்சி யாழ். குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (உ)

### பாகிஸ்தானில்

## அரசு — எதிரணியினர் மத்தியில் இணக்கம்

இஸ்லாமபாத், ஜூன் 15

பாகிஸ்தானில் இவ்வருட இறுதிக்குள் மீண்டும் பொதுத் தேர்தலை நடத்த பாகிஸ்தான் அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் ரீதியாக நடத்தப்படவில்லை.என்று குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சிகள் ஆட்சிமன்றத்தைப் பகிஷ்ரித்ததுடன் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதும் இதில் பலர் மாண்டதும் எதிர்க்கட்சித் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதும் தெரிந்ததே. (உ)

## "ஐ.தே.க. இடதுசாரிகளின் இல்ட்சியமற்ற போக்கு"

### கலுபோவிலவில் பிரதமர்

கொழும்பு,புதன்

"ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருப்பதனை அவர்களது போக்குக்காட்டுகிறது'' என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கலுபோவிலவில்நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறிஞர்.

அவர் தமது உரையில் "ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிடுவதற்கு இடதுசாரி முன்னணி தகுந்த வேட்பாளர்களை நிறுத்தாது ஏதோ சாட்டுக்கு பொருத்த மற்றவர்களை நிறுத்தியுள்ளது. ஐ தே. கட்சியும் இதேபோக்கை பின்பற்றியுள்ளது. இவர்களது நோக்கம் என்னை அரசியலில் இருந்தும் ஆட்சியில் இருந்தும் அகற்றுவது ஒன்றுதான் மக்கள் நலன், நாட்டு நலன் பற்றி இவர்களுக்கு அக்கறையே கிடையாது. இவ்வுண்மையை மக்கள் அறிவர். [ம-உ]

### "நான் எம்.பி.யானல்

## கூட்டணி வாலிபர்க்கும் உதவிசெய்வேன்'

— வி. குமாரசுவாமி

யாழ்ப்பாணம், வியா.

'ஆட்சிமன்றத்திற்கு நான் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் நான் பாகுபாடு காட்டாமல் திறமையின் அடிப்படையில் வாலிபர்களின் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பேன்; கூட்டணி வாலிபர்களுக்கும் நான் உதவிசெய்யக் காத்திருக்கிறேன். ஏனெனில் அவர்களும் தமிழ் வாலிபர்கள் தான்'.

சாவகச்சேரி 'சரஸ்வதி பூங்காவில் நேற்று முன்தினம் நடந்த வாலிபர் மாநாட்டில் பேசிய சாவகச்சேரித் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு எஸ். பரமசிவம் தலைமையில் நடந்த இம்மாநாட்டில், சாவகச்சேரித் தொகுதியைசேர்ந்த வாலிபர்கள் கலந்துகொண்டனர்.

திரு.வி.குமாரசுவாமிமேலும் கூறியதாவது; 'தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்குமுன் நாம் வாலிபர்களின பிரச்னையைத் தீர்த்துவைக்கவேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் படித்த வாலிபர்களும் யுவதிகளும் தங்கள் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிருர்கள். தாய்மார் தங்களின்பிள்ளைகளின் நிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிருர்கள். கடந்த 20 வருடகாலமாக ஒவ்வொரு வீட்டிலும் பிரச்னைகள் அதிகரித்துவருகிறது. அடுத்த 3 வருட காலத்தில் வாலிபர் பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டும்.

இது உங்கள் தேர்தல். நீங்கள்தான் இத்தேர்தலை முன்னின்று நடத்தவேண்டும். என்னை ஒரு கருவியாகப் பாவித்து உங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.

அடுத்த 3வருட காலத்தில் நான் மகாவலியை வடக்கே திருப்புவதுமட்டுமன்றி பலகுடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து வாலிபர் பிரச்னைகளையும் தீர்க்கத் திட்டமிட்டுள்ளேன்.

வரணி கிராமசபைத் தலைவர் திரு. முருகேசு, திரு. எம்.கமலநாதன் ஆசிரியர் சொக்கலிங்கம், திரு. வி. தில்லைநாதன், திரு. சு, பரமானந்தன், திரு. வி. பாலசிங்கம் ஆகியோரும் பேசினுர்கள். (க)

### அடுத்தவாரம் முதல்

# பங்கீட்டு புறம்பாக மல்லி, சீரகம் கிடைக்கு

கொழும்பு, புதன்

அடுத்தவாரத்தில் இருந்து பங்கீட்டுக்கு புறம்பாக மல்லி, சீரகம், வெள்ளைப்பூடு ஆகியன விநியோகிக்கப் படவுள்ளன.

கையிருப்பைப் பொறுத்து இவ்விநியோகத்தைச் செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகம் செய்யப்பட வழங்கப்பட்டிருந்த சீரகம், மல்லி என்பன மீதமாகவுள்ளன. சில சங்கங்கள் சீரகம், மல்லி என்பனவற்றை முழுமையாகப் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீதமுள்ள மல்லி, சீரகம் பூடு என்பன சேகரிக்கப்பட்டு பங்கீட்டுக்குப் புறம்பாக அடுத்த வாரம் முதல் விநியோகம் செய்யப்படும். (உ)

## ஆசிரியர்களை சமூகம் ஏன் மதிக்கிறது?

### ஆசிரியகலாசாலை அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர்கள் உளக்கல்வியுடன் உடற்கல்வியும் சேர்த்தே பயிற்சி பெறுவது வருங்காலச் சந்ததியை வளர்க்கும், ஆசிரியர்களின் மூலம்தான் சகல பிள்ளைகளும் உருவாகிருர்கள். அதனுல்தான் ஆசிரியர்கட்கு சமூகம் மிக உயர்ந்த அந்தஸ்தைக்கொடுத்து கௌரவிக்கிறது'' என்று பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வி. கந்தசாமி, மேற்படி பாடசாலை சினிமா மண்டபத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் சொன்ஞர்.

பாடசாலை பாடநெறி மாணவர் மத்தியில் ஒரு சிறந்த விளையாட்டுப்போட்டியை உதவி அதிபர் திரு. ஈ. கனகலிங்கம், விளையாட்டு ஆசிரியர் திரு. அருள்பிரகாசம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்தப் பரிசளிப்பு விழா ஸ்போர்ட் கவுன்சில் தலைவர் ஜனப் எஸ். ஜே. ஹுசைன் தலைமையில் நடைபெற்றது

அதிபர் திரு வி. கந்தசாமி மேலும் சொன்னதாவது:

ஆசிரியர்கள் சமூகத்தில் உதவும்பேது தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்

மாஸ்டர் மாஸ்டர் என்று பஸ்களில் கூட அழைப்பதால். சமூகம் ஆசிரியர்களைக் கவனித்த எண்ணமே உள்ளது

சமூகம் நேரே சொல்லாது போனுல் பின்புறம் நின்றுகேலி பேசாத அளவு சாதாரணமாக பழகவேண்டும்.

மற்ற தொழிலாளர்கூட மன்னிக்கப்படுகிருர்கள். ஆனுல் ஆசிரியர்களின் தவறுகளை சமூகம் மன்னிப்பதில்லை'' என்ருர்.

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ. இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........ |
| 80. | வட்டுக்கோட்டை | ........ |
| 81. | காங்கேசன்துறை | ........ |
| 82. | மானிப்பாய் | ........ |
| 83. | கோப்பாய் | ........ |
| 84. | உடுப்பிட்டி | ........ |
| 85. | பருத்தித்துறை | ........ |
| 86. | சாவகச்சேரி | ........ |
| 87. | நல்லூர் | ........ |
| 88. | யாழ்ப்பாணம் | ........ |
| 89. | கிளிநொச்சி | ........ |
| 90. | மன்னார் | ........ |
| 91. | முல்லைத்தீவு | ........ |
| 92. | வவுனியா | ........ |
| 94. | திருகோணமலை | ........ |
| 95. | மூதூர் | ........ |
| 96. | கல்குடா | ........ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........ |
| | (2) | ........ |
| 98. | பட்டிருப்பு | ........ |
| 100. | சம்மாந்துறை | ........ |
| 101. | கல்முனை | ........ |
| 102. | பொத்துவில் (1) | ........ |
| | (2) | ........ |
| 103. | புத்தளம் | ........ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ. இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ........ ரூபா ........ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77 போட்டி' நிபந்தனைகளுக்கும் அதன் நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும் கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத்தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன் ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிபபு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான] அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படி வாக்குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

பெயர்: ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ...

திகதி ........

கையொப்பம்

# உடுப்பிட்டியின் வெற்றியே

## கூட்டணியின் முக்கியலட்சியம்

—வி. தர்மலிங்கம்

சங்கானை, புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களில் சிறந்த கல்விமானும் பண்புள்ளவரும் இனத்தின் விடுதலைக்கு பாடுபடவேண்டும் என்ற நோக்கத்திற்காகதான் வகித்துவந்த உயர் அரசாங்க பதவியை தியாகம் செய்தவருமான திருலிங்கம் மா த. இராசலிங்கத்தை மிக பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெறச் செய்வதே தமிழர் விடுதலை கூட்டணியின் முக்கிய இலட்சியமாகும், அவரது கல்வித் தகமையையும் அரசாங்க ஊழியராக இருந்த சிறந்த அனுபவத்தையும் தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் இனவிடுதலைக்கு பாவித்துக் கொள்ள இத்தேர்தல் நல்ல தொருவாய்ப்பாகும்.

இவ்வாறு உடுவில் தொகுதி முன்னாள் பிரதிநிதியும் தமிழர் விடுதலைக் கூட்டணி மானிப்பாய்த் தொகுதி வேட்பாளருமான திரு. வி. தர்ம மானிப்பாய் கிராம சபையின் 14ம், 15ம் வட்டாரங்களுக்கான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையை திறந்து வைத்து பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும் போது தமிழ் பேசும் மக்கள் மாறிமாறி வந்த சிங்கள அரசாங்கங்களால் நசுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் ஒரு சமயம் தேசிய அரசுப்பேரவையில் தரப்படுத்தல் முறையை காரசாரமாக விமர்சித்து நான் பேசினேன். அந்தப் பேச்சு அடுத்தநாளே டெயிலிமிரர் பத்திரிகையில் முதல் பக்கச் செய்தியாக வந்தது அதே தினம் வெளிநாட்டு தூதரகமொன்றின் விருந்தில் நானும் கலந்து கொண்டேன். அச்சமயம் அங்கு பிரசன்னமாயிருந்த முன்னாள் பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜீ. பெர்னாண்டோ என்னைப் பார்த்து எனது தரப்படுத்தல் பற்றிய பேரவைப் பேச்சை தான் பத்திரிகையில் படித்ததாகவும் இந்தமாதிரி எல்லாம் தரப்படுத்தலை கண்டித்து பேசக்கூடாது என எனக்கு அறிவுரை கூறினார். நான் அவருக்குச் சொன்னேன் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் தரப்படுத்தலால் ஏற்பட்ட பாதிப்பையிட்டு எங்கள் ஆக்ரோசமான எதிர்ப்பை எந்த இடத்திலும் நாம் காட்டியே தீருவோம் என்று அதற்கு அவர் சொன்னார்' சிங்களவர்கள் ஆள்கின்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் எதைத் தருகிறார்களோ அதோடு தமிழர்கள் திருப்திப்படவேண்டுமென்றும் சிங்களவருடன் போராடி வெற்றிகாண முடியாதென்றும் கூறினார். இதே மாதிரியான 'ஒரு கருத்தை அதாவது ஆள்கின்ற சிங்களஇனம் தருகின்ற பிச்சையை ஏற்றுத்தான் தமிழர்கள் இந்த நாட்டில் வாழமுடியுமென்று தேசிய அரசுப் பேரவையில் முன்னாள் வலப்பனை நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இதை ஏன் சொல்கின்றேனென்றால் சாதாரண பாமர சிங்கள மக்கள் மட்டுமல்ல படித்த பிரதம நீதி அரசர் பதவியை வகித்தவர்கள்கூட சிங்களவர்கள் ஆளும் இனம் என்றும் தமிழர்கள் அவர்களின் அடிமை இனம் என்றும் மிகத்தீவிரமான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அக்கிரமத்தை எதிர்த்து இவர்களுக்கு நாங்கள் அடிமைகளாக மாட்டோம் என்று சபதம் எடுத்து தந்தை செல்வா காட்டியவழியில் சுதந்திர சமத்துவ தமிழ்ஈழத்தை அமைக்கத்துடிக்கும் நாம் திரு. இராசலிங்கத்தை வெற்றியடையச் செய்யாவிட்டால் நாங்கள் சிங்களவர் நினைப்பதைப் போல் அவர்களது அடிமைகளாக இருக்கத்தகுதி உள்ளவர்களே தவிர சுதந்திர இனமாக வாழத்தகுதியற்றவர்களாவோம் மற்றும் பலர் பேசினர்.

## செவ்வந்தி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியா

'கூட்டுமாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் 'செவ்வந்தி' சட்டத்துறை சம்பந்தமான கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் இலங்கையில் செல்வாக்குப் பெற்று வருகிறது. இதன் குறுகிய கால வளர்ச்சி எடுத்துக்காட்டுகிறது.'

யாழ் சட்டக்கல்வி நிலைய மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட செவ்வந்தி சஞ்சிகை விமர்சன ஆய்வரங்கிற்குத் தலைமை தாங்கிய திரு. சிவராசா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்வளாக விரிவுரையாளர் திரு. நித்தியானந்தன் பேசுகையில், செவ்வந்தியின் கட்டுரைகளில் 'புதிய பொருளாதார சிந்தனை அலைகளையுடைய கட்டுரைகள் பிரசுரிக்கப்படாதது சிறு குறையாகவே தென்படுகிறது. எனினும் இன்று பொருளியல் பயிலும் மாணவர்கட்கு தமிழில் புத்தகம் இல்லாத குறையை செவ்வந்தி தீர்த்து வைக்கிறது'' என்றார்.

யாழ்வளாக விரிவுரையாளர் திரு. நுஹ்மான் பேசுகையில், இந்தப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டபின்வெளிவந்த சஞ்சிகைகளில் செவ்வந்தி நல்லவாசகர்களை உருவாக்கி வளர்கிறது. என்பது அதன் வளர்ச்சி வேகத்தை நோக்கும்போது புலனாகிறது.' என்றார்.

ஆசிரியர் திரு. கந்தசாமி பேசுகையில் ஆரம்பித்த 8 மாதங்களுக்குள் இலங்கைப் பத்திரிகைத்துறையில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது இதன் வேகமான வளர்ச்சியிலும் வாசகர் தொகையிலும் இருந்துஅறியக் கூடியதாய் உள்ளது என்றார்.

யாழ்வளாக மாணவன் தர்மராஜா பேசுகையில் 'சட்டத்திற்கு மிகச்சிறந்த சேவையை செவ்வந்தி ஆற்றிவரும் இதே வேளையில் இலக்கியத்துக்கும் இடம் இன்னமும்வழங்குதல் அவசியம்' என்றார்.

திரு. கிழ்கரவை பொன்னையன் பேசுகையில் உயர்வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான அரசியல், பொருளியல், வணிகவியல் கட்டுரைகளை வழங்குவதன் மூலம் மாணவ உலகுக்கும் நல்ல சேவையை வழங்கி வருகிறது என்றார்.

சட்டத்தரணி சற்குணநாதன் பேசுகையில் 'செவ்வந்தி ஆய்வரங்கில் குறைபாடுகள் பற்றி பலர் கூறியபோதும் அவர்களின் பாராட்டுக்களுடன் ஒப்பு நோக்கும் போது அக்குறைபாடுகள் இடம் தெரியாமல் அடிபட்டு சென்றதை அவதானிக்ககூடியதாய் இருந்தது' என்றார்.

சஞ்சிகையின் ஆசிரியா திரு. பா. தவபாலன் பேசும் போது 'தரமான இலட்சிய நோக்குடைய சஞ்சிகைகளுக்கு சிறந்த எதிர்காலம் உண்டு என்பதை செவ்வந்தியின் வளர்ச்சி எடுத்துகாட்டுகிறது' என்றார்.

## நியமனம்

மட்டக்களப்பு, புதன்

ஈச்சந்தீவு-கன்னன்குடா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராக கன்னன்குடாவைச் சேர்ந்த திரு மா. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நியமனத்தை மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளர் வழங்கி உள்ளார். [உ]


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு / 62

பொன்னையா மயிலன் பொற்பதி றேட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் — வழக்காளி
எதிராக

இல: 20/1, 2-ம் ஒழுங்கை, பலாலி றேட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

1. இரத்தினம் நித்தியானந்தராசாவும் பெண்
2. விஜயலெட்சுமியும் — எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு / 62-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி [1977-8-3] புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2545/- சதம் 33-ம் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976-ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ம் திகதியிலிருந்து முழுத்தொகையும் இறுக்கப்படும் வரையும் 24 வீத வட்டியுடன் கொடுத்து வழக்குச்செலவு ரூபா 496 சதம் 80 கொடுக்க வேண்டும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணைக் கோவில்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை:- ''மாணிக்கன் காடு'' நில. பர. 0 குளி 14 1/10 இது உத்தரவுபெற்ற நில அளவைக்காரன் ரி. கந்தையா 29-9-66-ல் அளந்து விபரித்த 3008-ம் இலக்கப் படத்தில் 3-ம் துண்டு. இந்த நிலப்பரப்பு சைவர்குளி பதினாலும் பத்தில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு நல்லதம்பி செல்லையாவினுதனம். மேற்கு வயிரவர் கோவிலாதனம். தெற்கு ஒழுங்கை இதனடங்கலும் (முற்பதிவு டி 336/200).

சி. ஆ. த. வடிவேலு J. P,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை, வீதி
கோண்டாவில்.

6-6-1977 6455

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த

## இதயக்கனி

(ஈஸ்ட்மன்கலர்)

---

6-வது வாரம்

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்

## திருவருள்

(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

---

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15&9-45 P.m

## Caravan to Vaccares

(கறவான் டு வக்கறீஸ்)

(Scope-Color)

---

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 கட்சிகள்
சிவாஜி கணேசன், (இருவேடங்களில்)
உஷா நந்தினி, சௌகார் ஜானகி

## மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

---

**REGAL** (JAFFNA) Daily: 4-45,7-00 & 9-30 p.m.

Sidney James
in

## 'Carry on Camping'

(Color)

---

**வெலிங்டன்** [யாழ். நகர்]
ரஞ்சன் நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்

## நீலமலைத்திருடன்

**லிடோ** போன்: 7693 (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி கணேசன். நடித்த

## ஏழைபங்காளன்

---

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த

ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**

(ஈஸ்ட்மன் கலர்)

---

**சாந்தி** யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
போன்; 7642
10-30, 2-30, 6-30, 9-45

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
★ நம்பியார் ★ நாகேஷ்
நடித்த தேவரின்

## தனிப்பிறவி

---

# நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம்

கட்டிட கூலி வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. எமது கிளைக்கு 800 ச. அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள தரைக் கட்டிட வேலைக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 10/-ம் வைப்புப் பணம் ரூபா 100/-ம் செலுத்தி கூலி வேலை, விபர விண்ணப்பப் படிவத்தை 20-6-77 திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 27-6-77.

பொதுமுகாமையாளர்.
6461

---

## கேள்வி விளம்பரம்

மீசாலை வடக்கு அருணர் வளவடி ஒழுங்கை வேலைக்கான சீல் வைத்த கேள்வி விண்ணப்பங்கள் 29-6-77 முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்பும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 25/-ம் 28-6-77-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணி வரை இக் காரியாலயத்தில் கட்டி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கிராமாட்சி மன்றங்களின் புதிய கணக்கீட்டு முறையின் பிரகாரம் செவ்வாய்க்கிழமைகளில் மாத்திரம் பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் சாவகச்சேரி கிராமாட்சி மன்றப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

க. ஆறுமுகம்,
தலைவர்,
கி. ச. சாவகச்சேரி.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
சாவகச்சேரி,
13-6-77. 6460

---

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் - சுஜாதா
**வாழ்ந்து காட்டுகிறேன்**

---

**வெலிஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M. ராஜன் - லக்ஷ்மி
**அகத்தியர்**

---

# புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்

மேற்படி சங்கத்தில் 8000 வெற்றுச்சாக்குகள்வரை கேள்விப்பத்திரமூலம் விற்பனைசெய்வதற்கு இருக்கின்றது. கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்கு 5/-வும், வைப்பப்பணமாக 50/-வும், செலுத்தப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 27-6-77 காலை 9-30மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால்மூலம் என்வலப்பின் இடதுபக்க மூலையில் 'கேள்விப் பத்திரம்' என எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், புங். ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு எனக் குறிப்பிடப்பட்டு அனுப்புதல்வேண்டும். கீழ்க்காணும் பொருட்களை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

**ஏனைய பொருட்கள்**

(i) வெற்று றம்
(ii) சுவீப்பிங் மாவு
(iii) சுவீப்பிங் சீனி
(iv) பாவிக்கப்பட்ட லொறி ரயர்

பொது முகாமையாளர்
புங்குடுதீவு.
14-6-77. 6458

---

# விசேட ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி பட்டணம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலை செய்து முடிப்பதற்கு சீல் வைக்கப்பட்ட கேள்விகள் 25-06-1977-ந் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றும் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் திருப்பிப் பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 100/-ம் கட்டிய தன் பேரில் 24-06-1977-ந் திகதி நண்பகல் 12 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் மேல் பக்க இடது மூலையில் "கேள்வி அறிவித்தல் 1977" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை விசேட ஆணையாளருக்கு உண்டு.

கேள்விகள் யாவும் விசேட ஆணையாளர், கிளிநொச்சி பட்டணம், கிளிநொச்சி என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட அதிகாரிகள் எவருக்கும் அனுப்புதல் கூடாது.

மேலும் விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நாட்களில் மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**வேலை விபரம்**

1. குமாரசாமி வீதி, கிளிநொச்சி.

பி.எல். பேர்ட்டிசில்வா,
விசேட ஆணையாளர்.

விசேட ஆணையாளர்,
அலுவலகம்,
கிளிநொச்சி பட்டணம்,
கிளிநொச்சி,
25-05-1977. 6390

---

7-வது வாரம்

**ராணி** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்

## நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

---

# வரி விளம்பரம்

## தேவை

எங்கள் ஸ்தாபனத்திற்கு லொறி கிளீனர், சோடாப் பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய வான் சேல்ஸ்மென், சோடா பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய ஊழியர்கள் தேவை. நேரில் வந்து சந்திக்கவும். பிள்ளையார் ஸ்ரோஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 6447

## விற்பனைக்கு

கிளிநொச்சி கல்மடுநகர் 10 ஏக்கர் திட்டத்தில் நீர்ப்பாய்ச்சல் இருபோகம் முழுவதும் செய்யும். 15 ஏக்கர் வயல் நிலம்—33, கல்மடு, இராமநாதபுரம். 6446

பிரித்தானி அன்சானி (பேக்கின்ஸ் என்ஜின்), 6.5 H P அவுட் போட் மோட்டர் 15, சோமசுந்தரம் அவனியு சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 6452

CN 7044 இலக்க A40 ஒஸ்ரின் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. கதிரவேலு கிளிநொச்சி பராசக்தி தியேட்டர் அருகாமையில் பார்வையிடலாம். 6459

## தவறிவிட்டது

கொட்டடி குமரன் ஐக்கிய பண்டசாலை மேசையில் எமது எட்டுக் கூப்பன்களும் 4-6-77 சனிக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க. சிற்றம்பலம் ஆசிரியர், 23 சிவன் பண்ணைவீதி, கொட்டடியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். 6457

## CLASSES

I C M A, A C C A, Chartered Accountancy new classes will commence on 18-6-77 Saturdays 1-30 4-45 p.m. Sundays 8-30a m.- 4 00 p.m. at No. 22, Ramiah Chettiar-Lane, Hospital Road Jaffna 6456

---

## காரைநகரில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன் காரைநகர் பண்டத்தரிப் பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமான் தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழா இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவுள்ளது. 22-ந் திகதி முதல் கிரியைகள் நடைபெற்று 26-ந் திகதி கும்பாபிஷேகம் நிகழும். 27-ந் திகதி முதல் தொடர்ந்து 45 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நிகழும்.

## இரு ஊர்வலங்கள்

காரைநகர், புதன் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வாக்காளர் கூடிய பகுதியான காரைநகரில் ஞாயிறன்று இரு கட்சிகளின் ஊர்வலங்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி அபேட்சகரான திரு. மு. திருநாவுக்கரசுவின் ஊர்வலமும் முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி தியாகராசாவின் ஊர்வலமுமே நடைபெற்றன. (சு)

---

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த

## தேனும்பாலும்

ஈழநாடு
The EELANADU

# ‘குடும்பச் சொத்தாக அரசியல் மாறக்கூடாது

—சந்திரகாசன்

யாழ்ப்பாணம், வியாழன் குடும்பச்சொத்தாக அரசியல் மாறிவிடக்கூடாது. வம்சாவழியில் அரசியல் வரவேண்டும் என்பது அரசியல் சட்டங்களிலேகூட இடம்பெறவில்லை. கைலாயபிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற கூட்டணி தேர்தல் பிரசாரகூட்டத்தில் திரு. எஸ். சந்திரகாசன் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் உதவி மேயர் ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. சந்திரகாசன் தொடர்ந்து கூறியதாவது: தமிழர் விடுதலை கூட்டணியினர் தனிப்பட்ட நபரை தேர்தலில் நிறுத்தவில்லை. ஐக்கியப்பட்டவர்களையே நிறுத்தியிருக்கின்றது. கூட்டணிக்கெதிராக போட்டியிடுகின்றவர்கள் தமிழ்ஈழக் கோரிக்கையை உண்மையில் ஏற்றுக்கொண்டாராகில் இத்தேர்தலில் பொட்டியிடமுன் வந்திருக்கமாட்டார்.

யாழ். கூட்டணிவேட்பாளர் திரு. யோகேஸ்வரன் கூறியதாவது: 47 நாடுகளில் தேர்தல்' ஜனநாயகரீதியில்நடைபெற்று வந்தது. வருகின்ற தேர்தல், தமிழர் சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள் என்பதை உலகறியச்செய்யும்.

வண்ணை ஆனந்தன் பேசுகையில், நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தமிழன் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறான் இது உள் பிரச்னையாக இருக்காமல் எதிர்காலச் சந்ததியை வாழவைப்பதற்கு உலகறிந்த பிரச்னையாக ஏற்படுத்தவேண்டும்,

திரு. ஏ. துரைராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது: நேர்மையும், கண்ணியமும், திறமையுள்ள பேச்சாளர்களும் தூக்குமேடையைவிட்டு பின் செல்லாதவர்கள் இந்நாட்டின் விடுதலைக்கே தம்மை அர்ப்பணித்தவர்கள் தான் கூட்டணியின் இருபத்தியாறு வேட்பாளர்களும் இவர்களை தெரிந்தனுப்புவது உங்கள் கடமை என்றார்.

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்க்காங்கிரஸ் இருந்தால் தான் வாலிபமுன்னணி இருக்க முடியும். ஒவ்வொரு நாளும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறும் தம்பி குமார் நியமனக் குழுவின் நியாயமான செயலை அவமானம் என்றுகூறி அவமானச்செயலையே செய்கின்றார். ஏதாவது கருத்து வேற்றுமை இருந்தால் ஒரே மேடைக்கு வாருங்கள் பேசித்தீர்ப்போம். தயவு செய்து ஒற்றுமையைக் குலைக்காதீர்கள் என்று மீண்டும் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன். திரு.வி. தர்மலிங்கம், ஜனுப் முத்துராசா ஆகியோரும் பேசினார்கள். (க)

## பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்று

பருத்தித்துறை

வழக்கிலக்கம் 10934

புதுவளவு வல்வெட்டித்துறை இரத்தினசாமி ஜெயசந்திரன் வழக்காளி

விரோதமாக

இலங்கை சட்டத்துறை மாதலைமையதிபதி

எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனத்தில் மேற் சொல்லிய வழக்கில் ரூபா 6500/- ரூபாவை வழக்காளியால் எதிராளிக்கு கட்டும்படி தீர்த்த தீர்வைப்பிரகாரம் வழக்காளி உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1977-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந்திகதி காலை 10 மணியளவில் பிரசித்த வெந்திசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது. அதாவது-

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று பொலிகண்டிக் குறிச்சியிலை நெருஞ்சிக்காடு வீடு 1/4 டி. நி. பர. 20 இதில் மேற்குப் புறமாக 1/5 பங்கில் தெற்குப் புறமாக நி. பர. 1 எல்லை கிழக்கு வடிவேலு நடராசாவுக்குடைய வாதனம், வடக்கு பொன்னுச்சாமி வையாபுரி நாதனுக்குரியவாதனம் மேற்கும், தெற்கும் ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கட்டிடம் அடங்கலும்.

தம்பையா மகேந்திரன்
பிஸ்கால்

மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

6465

## கூட்டுறவு தராதர பத்திர பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், புதன் கூட்டுறவு தராதரப் பத்திர பயிற்சிநெறி சாதாரண பிரிவு இவ்வருடம் ஜூலை மாதம் 4-ந் திகதி தொடங்கவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியில் பொறுப்பதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## ஷேக் அப்துல்லாவுக்கு இருதயநோய்

புதுடில்லி, ஜூன் 15 'காஷ்மீர் சிங்கம்' என்று அழைக்கப்படும் காஷ்மீர் முதல்வர் ஜனுப் ஷேக் அப்துல்லா இருதயநோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் விரைவில் பூரண குணமடைய தாம் பிரார்த்திப்பதாக லண்டனிலிருந்து இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் செய்தி அனுப்பிஉள்ளார். (இ)

பட்டப்பகல் வேளை

# இரண்டுலட்சம் நகை ரொக்கம் கொள்ளை! பொலிஸ்காரருக்கு சூடு, கத்திக்குத்து!!

## தெமட்டகொடையில் சம்பவம்

கொழும்பு, புதன் அடைவுகடை ஒன்றிற்குள் பட்டப்பகல்வேளை துப்பாக்கிகள், கத்திகள்சகிதம் நுழைந்த ஐவர்கொண்ட கோஷ்டி ஒன்று இரண்டுலட்சம் ரூபா, பெறுமதிமிக்க தங்க நகைகளையும் ரூபா 1500 ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றது.

இவர்களைக் கைதுசெய்ய முயன்ற பொலிஸ்காரர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கும், கத்திக்குத்துக்கும் இலக்கானார்.

பெரும்பீதியை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் தெமட்டக்கொடையில் நேற்றுப் பகல் 11-30 மணியளவில் நடைபெற்றது.

கொள்ளையடித்தபின் தப்பியோடிய இக்கோஷ்டியை வழியில் கண்ட ஆரியதாஸ என்ற பொலிஸ்காரர் கைதுசெய்ய முயன்றபோது அவர்மீது துப்பாக்கிச்சூடு விழுந்ததாம்.

எனினும் அவர் தொடர்ந்து ஒருவரை விரட்டிச் சென்றபோது அவர் கத்தியால் குத்திவிட்டுத் தப்பியோடிவிட்டாராம். தலைமறைவாகிவிட்ட சந்தேகநபர்களை இப்பொலிஸ்காரரால் அடையாளம் காண்பிக்கமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தெமட்டக்கொடை, பொரளைப் பொலிசார் சந்தேக நபர்களைத் தேடிவருகின்றனர். (உ)

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, புதன் மாதகல் கிராமசேவையாளராக கடகையாற்றிய திரு எஸ். கந்தசாமி பெரியவிளான்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய் கிராமசேவையாளர் திரு. கே. பிரான்சிஸ் மாதகலுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (உ)

## தமிழ்நாட்டில் — —

1-ம் பக்கத்தொடர்ச்சி)

### அன்பழகன் வெற்றி

தி. மு. க.பொதுச் செயலாளரும் கருணாநிதிஅமைச்சரவையின் முன்னாள் அமைச்சருமான திரு கே. அன்பழகன் புரசைவாக்கம் தொகுதியில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனதாகட்சி வேட்பாளரை 19 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்

## சிறுப்பிட்டியில் கூட்டணிக்கிளை

யாழ்ப்பாணம்,புதன் சாதி மதபேதமற்ற ஒரு சமுதாயமே எமக்குத்தேவை அதற்கமைய நாம் வாழ்வோமேயானால், எமது உரிமைகளையும் இலகுவில் பெற்றுக் கொள்வோம். அதற்கேற்ற வழியை மறைந்த தலைவர்கள் எமக்கு வகுத்துத் தந்துள்ளார்கள்.

சிறுப்பிட்டியில் தமிழர் விடுதலை கூட்டணி கிளையை திறந்து வைத்த கோப்பாய் கூட்டணி வேட்பாளர் திரு. எஸ். கதிர வே லு ப் பி ள் ளை மேற்கண்டவாறு கூறினார்

ஆசிரியர் திரு வ மாணிக்கம் தலைமையில் நடந்த திறப்புவிழாவைத் தொடர்ந்து கருத்தரங்கு நடைபெற்றது. சட்டத்தரணி வி. பொன்னையா, புத்தூர் கிராமசபை தலைவர் திரு மு. திருநாவுக்கரசு திரு. அ கந்தசாமி ஆகியோர் உரையாற்றினர்கள்.

## 6 மாநிலங்களில் ஜனதாவுக்கு அறுதிப் பெரும்பான்மை

வடஇந்திய மாநிலங்கள் பலவற்றிலும் ஜனதா கட்சி அமோக வெற்றி ஈட்டியுள்ளது. ஒரிஸ்ஸா, ஹரியாணு, இமாலயப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியபிரதேசம்ஆகிய மாநிலங்களிலும் டில்லி யூனியன் பிரதேசத்திலும் ஜனதா கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது.

# ஆற்றில் மிதந்த பெண்ணின் சடலம்

கொழும்பு, புதன் ஆற்றங்கரையில் சென்றுகொண்டிருந்த 65 வயதுப் பெண் ஒருவர் கழுத்துத் துண்டிக்கப்பட்ட நிலையில் பிணமாக மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

நாகொடையில் உள்ள ஆற்றங்கரையோரமாக இப்பெண்மணி சென்றுகொண்டிருந்தபோது அவரிடமிருந்த 700 ரூபாவும் பறிக்சப்பட்டு அவரின் கழுத்தையும் இனந்தெரியாத நபர்கள் வெட்டியுள்ளனராம்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இழுபறி அடையாளங்கள் காணப்பட்டதாகவும் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 200 யார் தொலைவில் அப்பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தொவித்தனர். (இ)

# ‘ஒற்றுமையைக் கண்டு சிங்களமக்கள் வியக்கிறார்கள்

யாழ்ப்பாணம்,வியா. ‘கூட்டணியின்கொள்கைக்கு எதிரானவர்களை மக்கள் நம்பக்கூடாது’ என்று உடுப்பிட்டித்தொகுதியில் நடைபெற்ற கிளைத்திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: தமிழினத்தின் ஒற்றுமையையும் எழுச்சியையும் கண்டு சிங்களத் தலைவர்கள் வியந்து நிற்கையில் உடுப்பிட்டித்தொகுதியில் திரு. இராஜலிங்கத்தை நிறுத்தி தமிழினம்ஒரு தன்மானப்போராட்டம் நடத்தும்வேளையில் எட்டுப்பேர் அவரை எதிர்த்துப் போட்டியிட முற்பட்டுள்ளார்கள். என்மீது உண்மையான அன்புகொண்ட உடுப்பிட்டி வாழ்மக்கள் திரு. ராஜலிங்கத்திற்கு நிச்சயம் வெற்றியைத் தேடித்தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

இங்கு சுயேச்சையாகப் போட்டியிடும் சிலர் தாம் வெற்றிபெற்றால் கூட்டணியுடன் சேர்வதாக அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றப்பார்க்கிறார்கள். உடுப்பிட்டித்தொகுதியில் சுயேச்சையாக நிற்பவர்களுக்கு எக்காலத்திலும் கூட்டணியில் இடங்கொடுக்கமாட்டோம். திரு. ராஜலிங்கத்தின் வெற்றியே எனது வெற்றியாகும். (கா)

## கைதி தப்பியோட்டம்

கண்டி, புதன் போகம்பற சிறைச்சாலையில் இருந்து திருட்டுக் கைதி ஒருவர் தப்பியோடிவிட்டார். நாவின்னையைச் சேர்ந்த சரணபால பெரேரா (30வயது) என்ற இக் கைதி சிறைக் காவலரின் மேற்பார்வையின் கீழ் வேலை செய்துகொண்டிருக்கையில் தப்பிவிட்டதாகக் கூறப்பட்டது

(உ)

## உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்ற வைபவத்துடன். ஆரம்பமானது. இம்மாதம் 30ம் தேதி தீர்த்த திருவிழாவுடன் முடிவடையும் 29ம் தேதி தேர்த் திருவிழா இடம்பெறும்.

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் வருடாந்த மகோசற்லம் நேற்று ஆரம்பமானது தொடர்ந்து 10 நாட்கள் மகோற்சவமும் 11ம் நாள் திருக்கல்யாண பூங்காவன உற்சவமும் நடைபெறும் இம்மாதம் 23 ம் திகதி தேர்த்திருவிழாவும் 24ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். [க]

ஏற்புவலி

# தடுப்பு மருந்து பெறுவதில் சிரமம் என புகார்

வேலணை,புதன் பிரசவத்திற்குப் பின்பும் ஏற்புநோய் தடுப்பின் பொருட்டும் செலுத்தப்படும் ‘ரொக்சைட்’ என்ற ஊசி மருந்து வேலணை அரசினர் மருந்துவ மனையில் செலுத்தப்படுவதில் சிரமநிலை எற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி மருத்துவமனை வட்டாரங்களில் கேட்கப்பட்டபோது குறிப்பிட்ட மருந்து சீசாவை திறந்தால் அம்மருந்து சுமார் 50 பேருக்காவது தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டும் என்றும் ஆனல் குறிப்பிட்ட நோயளர்கள் ஒரே நேரத்தில் சிகிச்சைக்கு வருவதில்லை யென்றும் மிகக் குறைந்த தொகையினரே இவ்வகையான சிகிச்சை பெற வருவதால் சீசாவை திறந்தால் எஞ்சியமருந்து பழுதடைந்து விடுமென்றும தெரிவித்தனராம்.

இங்கு இம்மருந்தை பாதுகாப்பதற்கு குளிர்சாதனப் பெட்டி இல்லாமையே இக்குறைபாட்டுக்குக் காரணம் எனவும் கூறப்பட்டதாம்.(உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வென்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.